தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, மார்கழி 23, திருவள்ளுவர் ஆண்டு–2050

2020 ஜனவரி 8, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

இனிமையான சொற்கள் இருக்க அவற்றைச் சொல்லாமல், கடுமையான சொற்களைச் சொல்வது, பழத்தை விடுத்து காயைப் பறித்து உண்பதற்கு ஒப்பாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

6—

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

***44770—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மரியாதைக்குரிய பல்வேறு துறை சார்ந்த I.A.S., அதிகாரிகளுக்கும், பல்வேறு துறை சார்ந்த அரசு ஊழியர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் மற்றும் ஊடக நிருவாகிகளுக்கும், 2020 ஆம் ஆண்டில் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுப் பணியில் பணியாற்றி, ஓய்வுபெற்ற சுமார் 7½ இலட்சம் ஓய்வூதியதாரர்கள், மாதந்தோறும் ரூபாய் 350 வீதம் செலுத்தி, மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பயன் பெற்று வருகிறார்கள். எங்கள் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்களால், 2008 ஆம் ஆண்டு தொலைநோக்குப் பார்வையோடு வடிவமைக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் படிப்படியாகப் பல மாற்றங்களைப் பெற்று, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த அரசால் ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2018 என்று அந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண் 222, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 30—6—2018—ன்படி, 1—7—2018 முதல் 30—6—2022 வரை நான்கு ஆண்டுகளுக்கு சில சிறப்பு அம்சங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சைகள் பெறுவதற்கும் மற்றும் அறுவை சிகிச்சைகள் செய்துகொள்வதற்கும் உச்சவரம்புத் தொகை இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து நான்கு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

2020 ஜனவரி 8]

ஆனால், நடைமுறையில் அறுவை சிகிச்சைகளுக்கு மட்டும்தான் காப்பீட்டு நிறுவனங்கள் நிதியை வழங்குகின்றன. மேலும், மருத்துவச் சிகிச்சைகளுக்காக செலவிடப்படும் நிதியில் நான்கில் ஒரு பங்கு நிதியை மட்டும்தான் மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள் வழங்குகின்றன. முழு தொகையையும் வழங்குவதில்லை. எனவே, அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, அறுவை சிகிச்சைகள் இல்லாத மருத்துவச் சிகிச்சைகளுக்கு நிதி வழங்கவும், அறுவை சிகிச்சைகளுக்குச் செலவாகும் தொகை முழுவதையும் காப்பீட்டு நிறுவனங்கள் வழங்குவதற்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014 ஆம் ஆண்டு முதல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டு வந்தது. முதலில், 1–7–2014–ல் அறிமுகப்படுத்தப்பட்டு, 30–6–2018 வரை அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அப்போது இரண்டு இலட்சம் ரூபாய் அளவில், அரசுப் பணியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவச் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. மீண்டும், இத்திட்டம் 1–7–2018 முதல் 30–6–2022 வரை நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சைகள் பெறுவதற்கும் மற்றும் அறுவை சிகிச்சைகள் செய்துகொள்வதற்கும் நான்கு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10–05

இத்திட்டம் பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் மற்றும் MD இந்தியா தனியார் நிறுவனம்மூலம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 7.30 இலட்சம் அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள்

இணைந்துள்ளனர். இத்திட்டத்தில் காப்பீட்டுக் கட்டணமாக ரூ.350/– ஓய்வூதியர்/குடும்ப ஓய்வூதியரின் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 988 மருத்துவமனைகளில் பணமில்லா சிகிச்சை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மட்டும் 969 மருத்துவமனைகளும், புதுச்சேரியில் 8 மருத்துவமனைகளும், திருவனந்தபுரத்தில் 3 மருத்துவமனைகளும், புதுதில்லியில் 5 மருத்துவமனைகளும், பெங்களூருவில் 3 மருத்துவமனைகளும் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2019–2020 ஆம் ஆண்டிற்கான காப்பீட்டுக் கட்டணமாக ரூ.297.88 கோடி ரூபாய் நிதியினை யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு அரசு சிகிச்சைக்காக செலுத்தியுள்ளது. 1–7–2014 முதல் 30–6–2018 வரையிலான நான்காண்டு திட்டச் செயல்பாட்டில் 2,01,285 பயனாளிகள் 578.01 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். தற்போது ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2018–ன்கீழ், 1–7–2018 முதல் 31–12–2019 வரை 94,981 பயனாளிகள் 331.36 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர் என்பதையும், 1–7–2014 முதல் 31–12–2019 வரை 2,96,266 பயனாளிகள் 909.37 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது:

புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய் கட்டிகளுக்கான நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகளின்மூலம் மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சையும், சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சையும், விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் பல்வகைப்பட்ட எலும்பு முறிவு மற்றும் இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சையும், Aneurysms மற்றும் Angioplasty சிகிச்சையும், தீயினால் ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தில் கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்சவரம்பு, ஒரு கண்ணிற்கு 20,000 ரூபாயாகவும், கர்ப்பப்பை நீக்குவதற்கான அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்சவரம்பு

2020 ஜனவரி 8]

45,000 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தில், திடீரென்று எதிர்பாராதவிதமாக, உடனடி கவனிப்பு தேவைப்படுகின்ற மற்றும் விபத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அங்கீகரிக்கப்படாத (Non–Network) மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொண்டபின் மாவட்ட அளவிலான அதிகாரக் குழுமூலம் நடைமுறையில் உள்ள விதிகளின்படி அவர்களுக்கு மருத்துவ செலவினத் தொகையினை மீளப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 114 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகளை பணமில்லா சிகிச்சையாக மேற்கொள்வதற்கு வழிவகையும் செய்யப்பட்டுள்ளது என்பதையும், இப்புதிய திட்டத்தில், ஓய்வூதியதாரர்களைச் சார்ந்துள்ள மகன்/திருமணமாகாத மகள், வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, மாற்றுத்திறனாளியாக இருந்து மற்றும் பொருளீட்ட இயலாதவராக இருந்தாலோ, மணமாகாத/விவாகரத்து பெற்ற/விதவைகள் ஆகியோர் இப்பயனைப் பெற, சில நிபந்தனைகளுக்குட்பட்டு நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியர் அனைவருக்கும் ஒரு நீண்ட விளக்கத்தின் மூலமாக நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓய்வூதியதாரர்களுக்கும், அவர்களது வாழ்க்கைத் துணைக்கும் அரசின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பயனளிக்கிறது. ஓய்வூதியதாரர்களை நம்பி சார்ந்து வாழும் பெற்றோர்களான நடமாடும் தெய்வங்களுக்கும் இந்த மருத்துவக் காப்பீட்டுத் தொகை வழங்கும் திட்டத்தினை கனிவுடன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் விரிவுபடுத்த வேண்டும்.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள், 2—1—2020 அன்று நீதிப் பேராணை வழக்கு எண் 35621/2019—ல் வழங்கிய தீர்ப்பில், உதவி வேளாண் அதிகாரி திரு. கதிரவன் அவர்களுடைய தந்தையின் புற்றுநோய் அறுவை

சிகிச்சைக்கான ரூ.5,72,029/—ஐ காப்பீட்டு நிறுவனம் உடனடியாக வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டார். பெற்றோரின் சிகிச்சைக்கு செய்த செலவை பெறத் தகுதியில்லை என்ற காப்பீட்டு சட்ட விதி, சட்டத்திற்கு விரோதமானது என்பதை மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு நினைவுகூர்கிறேன். உள்ளாட்சி ஓய்வூதியதாரர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை விரிவுபடுத்த வேண்டும். அரசு ஊழியர்கள் மற்றும் உள்ளாட்சி ஊழியர்கள், குடும்ப பாதுகாப்புத் திட்டத்திற்கு மாதாமாதம் 80 ரூபாயைச் செலுத்துகின்றனர். அவர்கள் ஓய்வு பெற்று மறைந்தபிறகு, அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.50,000/— வழங்குகிறது. ஆனால், உள்ளாட்சி ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.35,000/— மட்டும் வழங்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், உள்ளாட்சி ஓய்வூதியதாரர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில், ரூ.50,000/—ஐ வழங்கிட வேண்டும். இதை வழங்கிட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஓய்வூதியதாரர்களை ஈன்ற தாய், தந்தையர்களுக்கும் இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதனையும் மற்றும் சில, பல கோரிக்கைகளையும் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, கருணையுடன் பரிசீலித்து, ஒரு நல்ல முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியதாரர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் இன்றைக்கு சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. சிறுநீரக நோயினால் மட்டும் இந்த ஆண்டு 129 கோடி பேர் பாதிக்கப்பட்டு, Dialysis செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தளவுக்கு சிறுநீரக நோயினால்

2020 ஜனவரி 8]

மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு முறையும் Board meeting–*ல் வைத்து, சிறுநீரகம் மாற்றம் செய்வது தொடர்பாக முடிவெடுக்க அதிக காலம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. சிறுநீரக நோயாளிகள்* Dialysis *செய்வதற்கு மிகவும் கஷ்டப்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அதிகமான அளவில், சுமார் 1.6 இலட்சம் பேர் இன்றைக்கு சிறுநீரகத்திற்காக காத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே,* Dialysis *செய்கின்றவர்களுக்கான* Board meeting–*ஐ விரைந்து நடத்தி முடிவெடுப்பதோடு, காப்பீட்டுத் திட்டத்தில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பிச்சாண்டி அவர்கள் முதலமைச்சருடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் சொல்கிறாரா அல்லது ஓய்வூதியதாரரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் சொல்கிறாரா என்பது தெரியவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

யோகா மையம்

***35656—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலத்தில் யோகா மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?